# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | |
|---|---|
| Summary Trial Case No: | STC.9/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.1(LW1) |
| Name : | அழகேஸ்வரி |
| Father's/Husband Name: | |
| Village : | |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 06.11.2025

**சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது**

**( எதிரிகள் A1–பாலதண்டாயுதம், A2–ஜெயகாந்தி , A3–செல்லமுத்து, A4–ராஜமாணிக்கம் , A5–சுதாகர் ஆஜர்)**

**முதல் விசாரணை**

(i) நான் தற்போது காரியானூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் கிழக்கு கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். ஆஜர் எதிரிகளை தெரியும். நான் பணிபுரிந்த கிராமத்தை சேர்ந்தவர்கள். சம்பவ சமயத்தில் பார்த்த வகையில் தெரியும். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். கை.களத்தூர் கிழக்கு கிராம நிர்வாக சர்வே எண்.34/9 பேருந்து நிலையம் இருக்கும் இடத்தில் வீடு மற்றும் கடைகள் ஆக்கிரமித்து கட்டப்பட்டிருந்ததால் மேற்படி ஆக்கிரமிப்பை அகற்றுவதற்காக 18.01.2024 அன்று கிராம உதவியாளர்கள் சிவக்குமார், ராஜா, வட்டாட்சியர் மாயக்கிருஷ்ணன், வருவாய் ஆய்வாளர் ராமலிங்கம் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர், வேப்பந்தட்டை மற்றும் பக்கத்து கிராம நிர்வாக அலுவலர்கள் உள்ளிட்டோர் மேற்படி ஆக்கிரமிப்பை அகற்றுவதற்காக காலை 10.00 மணியளவில் கை.களத்தூர் பேருந்து நிலையத்திற்கு ஆக்கிரமிப்பை அகற்றுவதற்காக சென்ற போது பாலதண்டாயுதம், ஜெயகாந்தி,

செல்லமுத்து, ராஜமாணிக்கம், சுதாகர் ஆகியோர்கள் ஆக்கிரமிப்பை அகற்றும் போது சட்டவிரோதமாக ஒன்று கூடி எங்களை தடுத்து பணி செய்ய விடாமல் தடுத்தார்கள். அதனால் நாங்கள் செய்த ஆக்கிரமிப்பை அகற்றும் பணி 3 மணி நேரத்திற்கும் மேலாக பாதிக்கப்பட்டது. தொடர்ந்து காவல் துறையிடம் புகார் அளித்ததன் பேரில் அவர்கள் எதிரிகளை கைது செய்து அப்புறப்படுத்திய பிறகு தான் ஆக்கிரமிப்பு பணி செய்யப்பட்டது. இது தொடர்பாக நான் புகார் அளித்தேன். மேற்படி புகார் (அது **அ.சா.ஆ.** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(i) கை.களத்தூர் கிராமத்தில் சம்பவ சமயத்தில் எத்தனை வருடங்களாக கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன் என்றால் 3 வருடங்களாக இருந்தேன். புகாரில் ஆக்கிரமிப்பை அகற்ற கிராம உதவியாளர் மற்றும் பக்கத்து கிராம அலுவலகத்தில் இருந்தவர்கள் மற்றும் வட்டாட்சியர் அவர்கள் உடன் வந்தார்கள் என்ற விவரத்தை குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. எனக்கு வருவாய் துறையில் குறிப்பிட்ட தேதியில் ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும் என எழுத்து மூலமாக அறிவிப்பை அனுப்பினார்களா என்றால் அனுப்பினார்கள் ஆனால் மேற்படி அறிவிப்பை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். உங்களுடைய புகாரில் எதிரிகள் தடுத்ததன் காரணமாக உங்களுடைய பணி பாதிக்கபட்டதாக எதையும் கூறவில்லை என்றால் வாய்மொழியாக நான் தெரிவித்தேன் எழுத்துமூலமாக நான் தெரிவிக்கவில்லை.

(ii) நீங்கள் சொல்வது போல எதிரிகள் உங்களை அவதூராக பேசி வழிமறிக்கவும் இல்லை நீங்கள் அரசாங்க அதிகாரி என்பதால் உங்களுக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி எதிரிகளின் மீது பொய் புகார் அளித்து அதன்பேரில் இவ்வழக்கு தொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் நீங்கள் இடிக்க முற்பட்ட சொத்திற்கு ஆதரவாக நீதிபேராணை வழக்கு மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாக தெரிவித்தார்கள் அதை உங்களால் ஏற்றுக்கொள்ளவும் பொருத்துகொள்ளவும் முடியாமல் உங்களுக்கு அதிகம் அதிகாரம் உள்ளதுபோல பாவித்து இந்த வழக்கை அவர்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | |
|---|---|
| Summary Trial Case No: | STC.9/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.2(LW2) |
| Name : | மாயக்கிருஷ்ணன் |
| Father's/Husband Name: | |
| Village : | |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 06.11.2025

**சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது**

**( எதிரிகள் A1–பாலதண்டாயுதம், A2–ஜெயகாந்தி , A3–செல்லமுத்து, A4–ராஜமாணிக்கம் , A5–சுதாகர் ஆஜர்)**

**முதல் விசாரணை**

(i) நான் தற்போது பெரம்பலூர் டாஸ்மாக்கில் வேலை செய்து வருகிறேன். சம்பவ சமயத்தில் நான் வேப்பந்தட்டை வட்டாட்சியராக பணிபுரிந்தேன். அ.சா.1–அழகேஸ்வரி அப்போதைய கிராம நிர்வாக அலுவலரை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். சம்பவ சமயத்தில் பார்த்த வகையில் தெரியும். 18.01.2024 கை.களத்தூர் கிழக்கு கிராம நிர்வாக சர்வே எண்.34/9 பேருந்து நிலையம் இருக்கும் இடத்தில் வீடு மற்றும் கடைகள் ஆக்கிரமித்து கட்டப்பட்டிருந்ததால் மேற்படி ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் பேரில் எதிரிகளுக்கு ஆக்கிரமிப்பை எடுக்கும்படி அறிவிப்பாணை கொடுக்கப்பட்டது. மேற்படி அறிவிப்பாணையில் எதிரிகள் பெறாததால் அவர்கள் கடையில் ஒட்டி அறிவிப்பாணை சார்வு செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து அவர்களே மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்றி கொள்ளாததால் 18.01.2024 அன்று கிராம உதவியாளர்கள் சிவக்குமார், ராஜா, வட்டாட்சியர், விஏஓ அழகேஸ்வரி, வருவாய் ஆய்வாளர் ராமலிங்கம் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர், வேப்பந்தட்டை மற்றும் பக்கத்து கிராம நிர்வாக அலுவலர்கள் உள்ளிட்டோர் மேற்படி ஆக்கிரமிப்பை அகற்றுவதற்காக காலை 10.00 மணியளவில் கை.களத்தூர் பேருந்து நிலையத்திற்கு

ஆக்கிரமிப்பை அகற்றுவதற்காக சென்ற போது பாலதண்டாயுதம், ஜெயகாந்தி, செல்லமுத்து, ராஜமாணிக்கம், சுதாகர் ஆகியோர்கள் ஆக்கிரமிப்பை அகற்றும் போது சட்டவிரோதமாக ஒன்று கூடி எங்களை தடுத்து அரசு பணியை செய்ய விடாமல் தடுத்தார்கள். அதனால் நாங்கள் செய்த ஆக்கிரமிப்பை அகற்றும் பணி 3 மணி நேரத்திற்கும் மேலாக பாதிக்கப்பட்டது. தொடர்ந்து காவல் துறையிடம் புகார் அளித்ததன் பேரில் அவர்கள் எதிரிகளை கைது செய்து அப்புறப்படுத்திய பிறகு தான் ஆக்கிரமிப்பு பணி செய்யப்பட்டது. இது தொடர்பாக கிராம நிர்வாக அலுவலர் அழகேஸ்வரி புகார் அளித்தார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(i) போலிஸ் விசாரணையின் போது நாங்கள் மாவட்ட ஆட்சி தலைவரின் அறிவுறுத்தலின் பேரில் தான் நாங்கள் ஆக்கிரமிப்பை அகற்ற சென்றோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் அந்த இடத்தில் எத்தனை வருடகாலமாக அனுபவத்தில் இருந்தார்கள் என்றால் 10 வருடமாக இருந்தார்கள். நாங்கள் ஆக்கிரமிப்பை அகற்ற செல்வதாக சொல்லும் இடம் பேருந்து நிலையம் என்றால் சரிதான். அது கும்பலாக இருந்தது என்றால் சரிதான். நீங்கள் முறைப்படி எந்த அறிவிப்பாணையும் அனுப்பாமல் நாங்கள் அரசு அதிகாரி என்பதால் அதிகாரத்தை துஸ்பிரயோகம் செய்து ஆக்கிரமிப்பை அகற்ற முற்பட்டோம் என்றால் சரியல்ல. நாங்கள் எங்களுடைய அரசு பணியை முடித்து விட்டோம் என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் உங்களுடைய அரசு பணியை செய்து முடித்தீர்கள் என்றாலும் எதிரிகளின் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளீர்கள் என்றாலும் சரியல்ல.

(ii) நீங்கள் சொல்வது போல எதிரிகள் உங்களை அவதூராக பேசி வழிமறிக்கவும் இல்லை நீங்கள் அரசாங்க அதிகாரி என்பதால் உங்களுக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி எதிரிகளின் மீது பொய் புகார் அளித்து அதன்பேரில் இவ்வழக்கு தொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் நீங்கள் இடிக்க முற்பட்ட சொத்திற்கு ஆதரவாக நீதிபேராணை வழக்கு மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாக தெரிவித்தார்கள் அதை உங்களால் ஏற்றுக்கொள்ளவும் பொருத்துகொள்ளவும்

முடியாமல் உங்களுக்கு அதிகம் அதிகாரம் உள்ளதுபோல பாவித்து இந்த வழக்கை அவர்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over to the Witness and admitted by the Witness to be correct

District Munsif
– Cum-
Judicial Magistrate

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | |
|---|---|
| Summary Trial Case No: | STC.9/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.3(LW4) |
| Name : | சிவக்குமார் |
| Father's/Husband Name: | வரதராஜ் |
| Village : | |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 47 /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 06.11.2025

**சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது**
**(எதிரிகள் A1–பாலதண்டாயுதம், A2–ஜெயகாந்தி , A3–செல்லமுத்து, A4–ராஜமாணிக்கம் , A5–சுதாகர் ஆஜர்)**
**முதல் விசாரணை**

(i) நான் தற்போதும் சம்பவ சமயத்திலும் கை.களத்தூர் மேற்கு கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். சம்பவ சமயத்தில் பார்த்த வகையில் தெரியும். கை.களத்தூர் கிழக்கு கிராம நிர்வாக சர்வே எண்.34/9 பேருந்து நிலையம் இருக்கும் இடத்தில் வீடு மற்றும் கடைகள் ஆக்கிரமித்து கட்டப்பட்டிருந்ததால் மேற்படி ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு 18.01.2024 அன்று கிராம உதவியாளர் ராஜா, வட்டாட்சியர் மாயக்கிருஷ்ணன், விஏஓ அழகேஸ்வரி, வருவாய் ஆய்வாளர் ராமலிங்கம் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர், வேப்பந்தட்டை மற்றும் பக்கத்து கிராம நிர்வாக அலுவலர்கள் உள்ளிட்டோர் மேற்படி ஆக்கிரமிப்பை அகற்றுவதற்காக காலை 10.00 மணியளவில் கை.களத்தூர் பேருந்து நிலையத்திற்கு ஆக்கிரமிப்பை அகற்றுவதற்காக சென்ற போது பாலதண்டாயுதம், ஜெயகாந்தி, செல்லமுத்து, ராஜமாணிக்கம், சுதாகர் ஆகியோர்கள் ஆக்கிரமிப்பை அகற்றும் போது சட்டவிரோதமாக ஒன்று கூடி எங்களை தடுத்து அரசு பணியை செய்ய விடாமல் தடுத்தார்கள். அதனால் நாங்கள் செய்த ஆக்கிரமிப்பை அகற்றும் பணி 3 மணி நேரத்திற்கும் மேலாக பாதிக்கப்பட்டது. தொடர்ந்து காவல் துறையிடம் புகார்

அளித்ததன் பேரில் அவர்கள் எதிரிகளை கைது செய்து அப்புறப்படுத்திய பிறகு தான் ஆக்கிரமிப்பு பணி செய்யப்பட்டது. இது தொடர்பாக கிராம நிர்வாக அலுவலர் அழகேஸ்வரி புகார் அளித்தார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(i) சம்பவம் குறித்து கிராம நிர்வாக அலுவலர் என்ன புகார் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் மேற்படி இடத்தில் சுமார் எத்தனை வருடமாக கடை மற்றும் வீடு கட்டி இருந்து வருகிறார்கள் என்றால் 30 வருடங்கள் இருக்கும். சம்பவத்தன்று முதலில் இடத்திற்கு சென்றபோது எதிரிகள் நீதிமன்ற உத்தரவை பற்றி சொன்னதால் அதன் பின்பு 3 மணி நேரம் கழித்து சம்பவ இடம் சென்றோம். நீங்கள் சொல்வது போல் எதிரிகள் உங்களை அரசு பணியை செய்ய விடாமல் மறிக்கவில்லை என்றால் சரியல்ல.

(ii) நீங்கள் சொல்வது போல எதிரிகள் உங்களை அவதூராக பேசி வழிமறிக்கவும் இல்லை நீங்கள் அரசாங்க அதிகாரிக்கு உதவியாளர் என்பதால் உங்கள் அதிகாரியின் அதிகாரத்தை பயன்படுத்தி எதிரிகளின் மீது பொய் புகார் அளித்து அதன்பேரில் இவ்வழக்கு தொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் நீங்கள் இடிக்க முற்பட்ட சொத்திற்கு ஆதரவாக நீதிபேராணை வழக்கு மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாக தெரிவித்தார்கள் அதை உங்களால் ஏற்றுக்கொள்ளவும் பொருத்துகொள்ளவும் முடியாமல் உங்களது அதிகாரியால் அதிகாரம் உள்ளதுபோல பாவித்து இந்த வழக்கை தாக்கல் செய்ததால் அதிகாரிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எனது அதிகாரிகள் அன்றைய தினத்தில் அவர்களது கடமையை செய்து முடித்தார்கள் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in open court read over to the Witness and admitted by the Witness to be correct

District Munsif
– Cum-
Judicial Magistrate